Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 29 [14-09-1993] செவ்வாய்க்கிழமை ஓசை 208

## தியாகி திலீபனின் நினைவாக உண்ணாவிரதம், சிரமதானம் ஏற்பாடு

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவாக நாளை முதல் யாழ். மாவட்டம் முழுவதும் அடையாள உண்ணாவிரதங்களும், சிரமதானப்பணிகளும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. நாளை அடையாள உண்ணாவிரதம் பின்வரும் இடங்களில் அனுஷ்டிக்கப்படவுள்ளன. சங்கானைவட்டத்தில் சங்கானை நிகர வைரவர் கோவில் முன்பாக சங்கானை, பண்டத்தரிப்பு, காரைநகர் ப. நோ. கூ. சங்க வலி மேற்கு பிரதேச சபை ஊழியர், கோப்பாய்வட்டத்தில் நீர்வேலி வாய்க்காற்தரவை பிள்ளையார் கோயில் முன்றலில், நீர்வேலி சிற்றூர் மக்கள், மானிப்பாய் வட்டத்தில் ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோவில் முன்றலில் ஆனைக்கோட்டை சிற்றூர்மக்கள், உடுவில் / தெல்லிப்பழை வட்டத்தில் சுன்னாகம் சிவன்கோவில் முன்றலில் சுன்னாகம் சிற்றூர்மக்கள், யாழ்ப்பாணம் வட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியில் யாழ். ப. நோ. கூ. சங்க ஊழியர், நல்லூர் வட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவில் [4ஆம் பக்கம் பார்க்க]

### 1994 யூன் மாத இறுதி

# யுத்தத்தில் வெற்றிபெற காலவரையறை; முப்படை தளபதிகளுக்கு அரசு வழங்கியது!

## டோறாபடகுகள் தாக்குதல் 2மீனவர்பலி; இருவர்காயம்

[வடமராட்சி]

வடமராட்சி கடற்பரப்பில் ரோந்து சென்ற சிறிலங்கா கடற்படையினரின் இரண்டு டோறா விசைப்படகுகள் மீனவர்கள்மீது மேற்கொண்ட அகோரத்தாக்குதலுக்கு இலக்காகி இரு மீனவர்கள் ஸ்தலத்திலேயே பலியாகினர். மேலும் ஒரு மீனவர் தலையில் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

முனை முதல் தொண்டமானாறு வரை கடற்படையினர் நேற்றுக் காலை 5 30 மணியிலிருந்து 6 00 மணி வரையில் மேற்கொண்ட பலத்த தாக்குதலுக்கு மீனவர்களது பல லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் நாசமாகின.

இரண்டு வெவ்வேறு சம்பவங்களில் நடைபெற்ற கடற்படைத் தாக்குதலிலேயே இருவர் பலியாகினர். தொண்டமனாறு பெரிய கடற்கரை வாசியான மூன்று பிள்ளைகளின் தந்தை த. இரத்தினசபை [வயது 28] என்பவரும், பலாலியிலிருந்து இடம் பெயர்ந்து சற்கோட்டையில் தங்கிவரும் பத்து பிள்ளைகளின் தந்தை ம. தேவதிரவியம் என்பவருமே இவ்வாறு பலியாகினர். இவர்களது சடலங்கள் கடலிலிருந்து மீட்க முடியவில்லை. சற்கோட்டையைச் சேர்ந்த இராசப்பு அன்ரன் குகதாஸ் [வயது22] என்பவர் தலையில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவர்.

சற்கோட்டை கடற்பரப்பில் மற்றொரு கட்டுமரத்தில் சென்ற செ. அன்ரன் உதயதாஸ், சி. அன்ரன் ஜெயகிரு

கிரனைட் தாக்குதலுக்குள்ளாகி

## கட்டு மரத்திலிருந்து கடலில் வீழ்ந்தார்

## வடபகுதியில் அடுத்த வாரம் பாரிய ராணுவ நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு – கிழக்கு யுத்தத்திற்கு 1994 யூன் மாதத்திற்கு முன்னர் முடிவு கட்ட வேண்டும். அதற்கு ஏற்ப தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை முனைப்புடன் முன்னெடுத்துச் செல்லுங்கள் என்று அரசாங்க மேலிடம் முப்படைகளின் தளபதிகளுக்கும் பணிப்புரை வழங்கியிருப்பதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை அடுத்தவாரம் நடுப்பகுதியில் வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கலாம் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் இந்தப் பணிப்புரையை அடுத்து முப்படையினரும் உசார்ப்படுத்தப்பட்டுள்ளனர். போரில் வெற்றியீட்டுங்கள் உங்களுக்குப் பதவி உயர்வுகள் காத்திருக்கின்றன என இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்தின இராணுவத்தினருக்குத் தெரிவித்திருக்கின்றார்.

இராணுவத்தினருக்கு உதவுவதற்கு கடற்படையினரும் விமானப்படையினரும் தயார் நிலையில் உள்ளனர். புலிகளுக்கு எதிரான பாரிய இராணுவ நடவடிக்கை பெரும்பாலும் அடுத்த வாரம் நடுப்பகுதியில் வடக்கில் ஆரம்பிக்கப்படலாம் என தெரியவருகிறது.

அரசாங்கத்தின் எண்ணப்படி அடுத்த ஜனவரிக்கு முன்னர் கிழக்கு மாகாணத்திலும் ஜூன் மாதத்திற்கு முன்னர் வடமாகாணத்திலும் யுத்தத்தை முடிவுக் கொண்டு வர வேண்டும் என்ற கால எல்லையும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

வடக்கு கிழக்கில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் நோக்குடனேயே அண்மையில் இராணுவ தலைமைப் பீடத்தில் பாரிய மாற்றங்கள் செய்

## யுத்தமுனைக்குச் செல்ல விரும்பாத அதிகாரிகளுக்கு பதவிஉயர்வுஇல்லை

(வடமராட்சி)

சிறிலங்கா கடற்படையினர் கட்டுமரத்தில் தொழிலில் ஈடுபட்டிருந்த எங்களைச் சுற்றி வளைத்து கிரனைட் தாக்குதலை மேற்கொண்டதில் என்னுடன் தொழிலுக்கு வந்து கட்டுமரத்தில் நின்றவர் கிரனைட் தாக்குதலுக்கு இலக்காகி கடலில் விழுந்தார்.

இவ்வாறு நேற்றுக்காலை சக்கோட்டைக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் கரையை வந்தடைந்த இராசப்பு அன்ரன் குகதாஸ் எமது வடமராட்சிச் செய்தியாளருக்கு விபரித்தார்.

அவர் மேலும் விபரிக்கையில், நானும் நண்பன் தேவதிரவியமும் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது கடற்படைப் படகுகள் இரண்டு கண்மூடித்தனமான முறையில் பீரங்கி, ஷெல் தாக்குதலை மேற்கொண்டன.

நிலவு தேய்ந்து கொண்டு செல்லும் நேரமாக இருந்ததில் கடற்படைப் படகுகள் வந்ததை எங்களால் தெரிந்து கொள்ள முடியவில்லை. என்ஜின் இல்லாத படகுகளில் சென்ற நாங்கள் விரைவாக கரைக்கு வந்துகொள்ளமுடியவில்லை எனினும் முயற்சித்த வேளை கடற்படைப் படகுகள் எம்மை சுற்றி வளைத்து கண்மூடித்தனமாக தாக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

தாஸ், சி. அன்ரன் ஜெபகுமார் ஆகியோர் ஒருவாறு நீந்தி கரையை வந்தடைந்தனர். தொண்டமனாறு, வல்வெட்டித்துறை, பொலிகண்டி, சக்கோட்டை, பருத்தித்துறை, முனை ஆகியபகுதிகளில் கடற்படையினரின் தாக்குதலுக்கு 4 படகுகள், ஒருஎன்ஜின், பல வலைகள், எரிபொருள்பலவும் நாசமாகின. மீனவர்கள் மீது கடற்படையினர் பீரங்கி, ஷெல், கிரனைட் ஆகியவற்றின் மூலம் கடும் தாக்குதல் செய்தனர். [வோ]

மீனவர் படகுமீது தாக்கிய

## கடற்படை படகுகளை கடற்புலிகள் விரட்டியடிப்பு

வடமராட்சிக் கடற்பரப்பில் மீனவர் மீது நேற்று தாக்குதல் மேற்கொண்ட கடற்படையினரின் டோறாப் படகுகள் கடற்புலிகளால் விரட்டியடிக்கப்பட்டன.

கடற்படைப் படகுகள் மீது அப்பகுதிக்கு விரைந்து சென்ற கடற்புலிகள் கடுமையான தாக்குதலை மேற்கொண்டனர் எனவும் அதனையடுத்து கடற்படைப் படகுகள் கணப்பொழுதில் ஓடிமறைந்தன எனவும் எமது வடமராட்சிச் செய்தியாளர் அறிவிக்கிறார். (வோ)

# இந்திய மீனவரின் உரிமை சிறிலங்காவினால் மறுப்பு

## இந்திய அரசு குற்றச்சாட்டு

(சென்னை)

கச்சதீவுக் கடற்பிராந்தியத்தில் இந்திய மீனவர்களுக்கு நீண்டகாலமாக இருந்து வந்த உரிமைகளை சிறிலங்கா மறுத்து வருவதாக இலங்கைமீது இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

கச்சதீவு தொடர்பாக இரு நாடுகளுக்குமிடைப்பட்ட இருதரப்பு உடன்படிக்கையை இலங்கை அரசு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகிறது என்றும் சிறிலங்கா அரசு மீது இந்தியஅரசு குற்றம்சாட்டியுள்ளது.

புதுடில்லியில் இருந்து வெளியிடப்பட்ட அறிக்கையொன்றிலேயே சிறிலங்கா மீதான மேற்படி குற்றச்சாட்டுத்தெரிவிக்கப்படுகிறது. சிறிலங்கா அரசு புதிதாக அறிமுகப்படுத்தியிருக்கும் கடல் தடைச்சட்டம் மேற்படி பகுதியில் இந்திய மீனவர்களை பெரிதும் பாதிப்பதாக உள்ளது என்றும் இதனால் இச் சட்டத்தை மறுபரிசீலனை செய்வதற்கு சிறிலங்கா அரசு முன்வர வேண்டும் என்றும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சிறிலங்கா அரசு பிரகடனப் படுத்தியுள்ள இந்தக் கடல் தடைச் சட்டத்துக்கு இந்திய அரசு ஒப்புதலை அளித்திருப்பதாகச் செய்திகள் கூறுவது தவறானது என்றும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஹமில்டன் தெரிவிப்பு

[கொழும்பு]

யுத்தகளத்திற்குச் செல்ல விரும்பாத உயர் அதிகாரிகளுக்கு எதிர்காலத்தில் பதவி உயர்வு வழங்கப்படமாட்டாது. வயது அடிப்படையில் அல்லாது செயல்திட்ட அடிப்படையிலேயே பதவி உயர்வுகள் வழங்கப்படும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வணசிங்க தெரிவித்தார்.

பாதுகாப்பு பிரிவு அதிமுக்கியத்துவம் வாய்ந்த நிலையில் உள்ள இன்றைய நிலையில் வயது மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்படுவதால் பலகளத்தில் நிற்கும் அதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

தில் பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

கிழக்கு மாகாணத்திலுள்ள பிராந்தியத்தளபதிகளுக்கு அரசாங்கத்தின் புதிய அணுகுமுறைபற்றி ஏற்கனவே தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் மேற்படி அணுகு

(4ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே...

தியாகி திலீபனின் உருவப் படம் இன்றைய ஈழநாதம் பத்திரிகையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

குறிப்பு: நாளைய ஈழநாதத்துடனும் தியாகி திலீபனின் உருவப்படம் இணைக்கப்படும்.

# தியாகிதிலீபன்6ஆம்ஆண்டு நினைவுநாள்நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தாயக விடுதலைக்காக தன்னுயிரைத் தியாகம் செய்த தியாகி லெப். கேணல் திலீபனின் 6ஆம் ஆண்டு நிறைவு நினைவு நாட்களை நினைவு கூருவதற்காகவும் அஞ்சலி செலுத்துவதற்காகவும் தமிழீழ மக்கள் தயாராகிவருகின்றனர்.

இந்திய இலங்கை அரசுகளின் கபட நாடகத்தை அம்பலப்படுத்தவும், தமிழ் மக்களின் உரிமைகளைக் கோரியும் நீராகாரம் கூட அருந்தாமல் தியாகி திலீபன் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த நினைவு தினம் நாளையாகும். நாளை முதல் தியாகி திலீபன் தியாக மரணமடைந்த தினம் வரை தியாகி திலீபனை நினைவு கூருவதற்கும், அஞ்சலி செலுத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மேற்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதை நேரில் அவதானிக்க முடிந்தது. குடாநாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள பிரதான வீதிகள்தோறும் தியாகி திலீபனை நினைவு கூரும் பதாகைகள் கட்டப்பட்டுள்ளன. அத்துடன் சிவப்பு, மஞ்சள் வர்ணக்கொடிகளும் கட்டப்பட்டுள்ளன. யாழ். நகரத்தில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் மத்திய பஸ் நிலையப்பகுதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வர்ணத் தோரணங்களும், பதாகைகளும் கட்டப்பட்டுள்ளன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நோயாளருக்கு

(குருநகர்)

வைத்திய சிகிச்சைக்காக கொழும்பு செல்வதற்கு வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்டிருக்கும் நோயாளர்கள் எதிர்வரும் 16ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணிக்கு தமது காரியாலயத்தில் சமுகம் தரும்படி யாழ். பொது வைத்தியசாலை பணிப்பாளர் கேட்டுக் கொள்கிறார்.

நோயாளர்கள் சிபார்சு கடிதங்களுடனும் மற்றும் அடையாள அட்டைகளுடனும் சமுகம் தரும்படியும் மேலும் அச் செய்திக் குறிப்பில் கேட்கப்பட்டுள்ளது. (21)

## மீனவர் மீது தாக்குதல்

நேற்று அதிகாலை 6 மணியளவில் பூநகரி-பந்தலடி சிறிலங்கா ராணுவ காவலரணில் இருந்து குடாக் கடலில் மீன் பிடித்துக் கொண்டு நின்ற மீனவர்களை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. நா. சபை பிரதிநிதி கொழும்பு வருகின்றார்

## சமரச தீர்வுகாண முயற்சிப்பாராம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வொன்றைக் காணும் முயற்சியாக ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி ஒருவர் அடுத்த மாதம் கொழும்பு வரவுள்ளார், இவர் விடுதலைப் புலிகளையும், சிறிலங்கா அரசாங்கத்தையும் பேச்சுவார்த்தைக்கு அருகில் கொண்டுவர நடவடிக்கைகளை மேற்கொள்வார் என ''லங்கா தீப'' என்னும் சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் அச்செய்தியில் ஐ. நா. சமாதானப்படை ஒன்று இலங்கைக்கு வருவதை சிறிலங்கா அரசு விரும்புகின்றதா என்பதை அப்பிரதிநிதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**க வேரி சீயாககாய் பவுடர்**

கண் குளிர்மைக்கும் கூந்தல் வளர்ச்சிக்கும் தொடர்ந்து பாவியுங்கள் ஷாம்போவை விட நன்மை மிகு பலன் தரும் கிடைக்குமிடம் லெட்சுமி நிலையம் கோப்பாய்
[5833]

**விற்பனைக்கு**

வல்லை நாற்சந்தியிலிருந்து செல்வச்சந்நிதி செல்லும் வீதியிலுள்ள 14 பரப்பு பனங்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: இ. சி. தனபால சிங்கம் தெணியம்பை வீதி, வல்வெட்டித்துறை (4100)

**சைவசமய பாடப் பரீட்சை**

சரசாலை இந்து மன்றத்தினர் சரசாலை கிராமத்தில் உள்ள மாணவர்களிடையே சைவசமய பாடப் பரீட்சை ஒன்றை ஆண்டு 3 முதல் ஆண்டு 11 வரை நடாத்தவுள்ளனர்
இப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி 30 9 93 எனவும் தெரிவிக்கப்படுகின்றது. [24]

**ஆதாரம்காட்டி பெறவும்**

(யாழ்ப்பாணம்)
சிறியநகை ஒன்று கண்டி வீதியில் சாம்சன் குடியிருப்பிற்கு முன் பாகக்கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது உரியவர் வந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

**யாழ் பல்கலைக்கழக விரிவுரைகள்**

கணிதமும் புள்ளிவிபரவியலும்
விரிவுரை: திரு R ஜெகன் B. Sc
ஆரம்பம்: 18 09 1993
First in Com – Basic Mathematics
B Com Part I – Mathematics & Statistics
B Com. Part II – Financial Mathematics &

---

## விண்ணக வாழ்வில்

**10 வருடம் 10 ந நாட்கள்**




அமரர்

**திருமதி தேவி கிளேற்றன்** | **திரு. நல்லையா கிளேற்றன்**

[சுதந்திர நாயகி] [ஒளி இல்லம் உரிமையாளர்]

மலர்வு : 10 02-1948 உதிர்வு: 14 09 1983

மலர்வு: 10-12 1947 உதிர்வு: 01-06-1993

விண்ணக வாழ்வில் ஒன்றிணைந்த
அன்புத் தெய்வங்களே !
இவ்வுலகின் எமது ஒவ்வொரு செயற்பாட்டிலும்
உங்களை எண்ணித் தவிக்கின்றோம் !
எத்தனை நாட் சென்றிடினும் உமைமறவோம்
எம்துயர் தனைப்போக்க அங்கிருந்து வேண்டிடுவீர் !!

இவர்கள் பிரிவால் வருந்தும்
பிள்ளைகள்.

6 றக்கா லேன்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (6001)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 25 — 04 — 1966



வீரச்சாவு: 14 — 09 — 1991

**வீரவேங்கை பூட்டி**

[ இராசரத்தினம் ஜெயதேவி (ஜேந்தி) ]

மங்களம் பொங்கும் தமிழ் மண்ணை

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. குமாரசாமி இராசேஸ்வரன்**

மண்ணில்: 23 06-1963 விண்ணில்: 16 09-1990

திதி: 14-09-1993


மொட்டாகி மலராகி, பிஞ்சாகி நிற்கையிலே
எட்டாத தொலைதூரம் ஏன் நடந்தாய் இராசு
பாசத்தைச் சொரிந்து பொழுதெல்லாம் பழகினமே
நேசித்த நெஞ்சங்கள் நீர்சிந்தி நிற்குதிங்கே
உன் ஆன்மா சாந்திபெற வழுத்துகின்றோம்

முருகமூர்த்தி ஆலய வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
(3447)

தகவல் :
தாய், சகோதரர்,
சகோதரி.

---

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியையும்

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**லெப்டினன்ட் குலன்**

சபாபதி பார்த்தீபன்

தோற்றம் 20-5 74 | வீரச்சாவு 14-9-91

பொன்னுக்காய் பொருளுக்காய் பறக்கின்ற
வேளைதனில்
எம் மண்ணுக்காய் உயிர்நீத்த மாவீரா!
பொங்கிவரும் கண்ணீரும் புரையோடும் வேதனையும்
தங்கமே நீ வளர்த்த தியாகச்சுடர் கண்டுதுணியும்
பொங்கிடும் தியாகமும் புரையோடும் வீரமும் வென்றிடும்
தமிழீழம் காண்பாய் வித்தான வீரனன்றோ நீ!
உமது ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கும்

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
(6012)

அன்பு அப்பா, அம்மா,
சகோதரிகள், சகோதரர்கள்,
மச்சான்மார், உறவினர்கள்.

---

## நினைவு கூருகின்றோம் ...

**1993-09-14**

1985ஆம் ஆண்டு இத்தினத்தில் திருமலை-மூதூர், கூனித்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-
**லோகிதன்** (கணபதிப்பிள்ளை யோகராசா - தம்பலகமம் - திருமலை)

1989ஆம் ஆண்டு தமிழகத்தில் சிகிச்சை பெற்று வரும் போது வீரச்சாவெய்திய-
**கப்டன் ரங்கன்** (விநாசித்தம்பி ரங்கநாதன் - காரைநகர் - யாழ்)

முள்ளைத்தீவு - விசுவமடுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-
**2-ம் லெப் கிளியன்** (கிருஷ்ணபிள்ளை நடனகுமார்- 128, வில்சன் வீதி - கிளிநொச்சி)

1990ஆம் ஆண்டு தலைமன்னாரில், சிறிலங்கா கடற்படை முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-
**2-ம் லெப் ரகுபதி** (மரியதாஸ்யூட் அமல்ராஜ் - மணல்குளம், உயிலங்குளம்- மன்னார்)
**2-ம் லெப். நவாஸ்'சீலன்** ...

ஆரம்பம்: 18 09 1993

First in Com – Basic Mathematics

B Com Part I – Mathematics & Statistics

B Com. Part II – Financial Mathematics & Business Mathematics

உயர்கலைக் கல்லூரி,
ஆனைப்பந்தி யாழ்.

(6009)

யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்
இலங்கை

## பட்டப்பின் டிப்ளோமா பொது நிர்வாகம் முதலாம் அரையாண்டுப் பரீட்சை – 1993

மேற்படி பரீட்சை 11-10-93 தொடக்கம் 16-10 93 வரை நடைபெற உள்ளது. பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களைப் பரீட்சை கிளையில் பெற்று, பூர்த்தி செய்து உதவிப் பதிவாளர் / பரீட்சைகள் அலுவலகத்தில் 25-09-93ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பிக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு ரூபா. 15/- வீதம் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

–பதிவாளர்

(சி-7416)



1966 — 1991

## வீரவேங்கை யூட்டி

[ இராசரத்தினம் ஜெயதேவி (ஜேந்தி) ]

மங்கலம் பொங்கும் தமிழ் மண்ணை
மாற்றான் ஆண்டிட விட்டிடாது
வெங்களம் கண்டிட விரைந்தோடினாய்
வீரர்கள் சென்ற தடந்தேடினாய்
சிங்களக் கலியைச் சிதறடித்தாய்
சிறப்புடன் சென்றாய் விண்ணுலகு.

14-09-1993 இன்று நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு போராளிகள், உறவினர், பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

வேம்படி,
உடுத்துறை.

[5827]

## 1-ம் ஆண்டு நினைவு தினம்

| தாயின் மடியில்: | | தாயக மண்ணில்: |
| --- | --- | --- |
| 02 |  | 27 |
| — | | — |
| 11 | | 08 |
| — | | — |
| 1972 | | 1993 |

### 2-ம் லெப். இளங்கோ

(பாஸ்கரன் பிரபாகரன்)

திதி: 14-09-1993 சதுர்த்தசி

ஓராண்டு சென்றாலும் நீங்காத உன் நினைவுடன் இவருடன் வீரச்சாவெய்திய ஏனைய போராளிகளுக்கும் எமது இதய அஞ்சலிகள்.

கைதடி கிழக்கு,
கைதடி.

(6004)

-குடும்பத்தினர்

## அந்தியேட்டி கிரியையும்





| கப்டன் வதனி | லெப். தில்லைச்செல்வி |
| --- | --- |
| (இரத்தினசிங்கம் சியாமளா-செல்வி) | (நித்தியானந்தம் பிரேமானந்தி-நந்தினி) |
| இரணைமடுச்சந்தி கிளிநொச்சி | தொல்புரம் மத்தி சுழிபுரம் |

| பிறப்பு | வீரச்சாவு | பிறப்பு | வீரச்சாவு |
| --- | --- | --- | --- |
| 19-08-1974 | 30-07 1993 | 17-08-1973 | 02 08 1993 |

ஈழத்தின் விடிவினைத் தேடி
ஈழமறவர் கூட்டத்தில் இணைந்தீர்கள்
தானைத் தலைவனின் படையினிலே
களங்கள் பல கண்டு வந்தீர்கள்

சுதந்திர ஈழத்தின் பாதையெல்லாம்
எதிரி நோக்கி வீறு நடைபோட்டீர்கள்
களங்கள் பல வென்ற நீங்கள்
மாவீரர் ஆகி விட்டீர்கள்

தங்கள் செய்தி கேட்டெங்கள்
மனங்கள் இங்கே துடிக்குதம்மா
உங்கள் இறப்பு என்றும் இழப்பல்ல
என்றும் எம் மண்ணின், மனங்களின் பிறப்பு.

நாளை 15-09-1993 அன்று நடைபெற இருக்கும் அந்தியேட்டி கிரியையில் உற்றார், உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் சமூகம் தந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(5936) - நித்தியானந்தம் குடும்பத்தினர்

முல்லைத்தீவு - விசுவமடுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**2-ம் லெப் கிளியன்** (கிருஷ்ணபிள்ளை நடனகுமார் - 128, வில்சன் வீதி - கிளிநொச்சி)

1990ஆம் ஆண்டு தலைமன்னாரில், சிறிலங்கா கடற்படை முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**2-ம் லெப் ரகுபதி** (மரியதாஸ்யூட் அமல்ராஜ் - மணல்குளம், உயிலங்குளம் - மன்னார்)

**2-ம் லெப். நவாஸ்/சீலன்** (அகஸ்ரின் அந்தோனிமுத்து சகாயசீலன் - முருங்கன் - மன்னார்)

**ரவி/அன்ரனி** (ஜேசுதாசன் மைக்கல் - சாவற்காடு - மன்னார்)

யாழ் - கோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**சிறீராம்** (சபாரத்தினம் தேசிகர் நந்தகுமார் - சாம்பல்தீவு திருமலை)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட செங்கலடி 2ஐச் சேர்ந்த 02 தமிழிளைஞர்கள். அலுவலகத்திலிருந்து முஸ்லிம் கும்பலொன்றினால் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வாழைச்சேனை, கண்ணகிபுரத்தைச் சேர்ந்த தபால் ஊழியரான தமிழ்ப் பொதுமகன். வாழைச்சேனையில் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

மன்னார் - சிலாவத்துறைப் பகுதியில் வயலில் வேலை செய்து கொண்டிருக்கையில் சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 10 தமிழ் விவசாயிகள்.

சாவகச்சேரியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட விவசாயி.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**ஜீவனிதா** (வசந்தி தங்கராசா - மட்டு)

**செனித் சோதிராசா** (இராசையா குமார் - ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**உமா** (சித்திராதேவி ஆறுமுகம் - பூவரசங்குளம் - வவுனியா)

**ரவி/தயாளன்** [சின்னையா குமார - கணேசபுரம் - கிளிநொச்சி]

**லெப். அலிபா** (மாமுடி கிருஷ்ணகுமாரி - ஆண்டாங்குளம், அடம்பன் - மன்னார்)

**நியாஸ்** (இராமநாதன் ஜெயானந்தராசா - காரைநகர். யாழ்)

**சுதா** (ரஜனி பாலேந்திரன் - புன்னாலைக்கட்டுவன் தெற்கு யாழ்)

**யூட்டி** (ஜெயதேவி இராசரத்தினம் - உடுத்துறை வடக்கு, தாளையடி - வடமராட்சி கிழக்கு)

**ஜெகன்** [ஜெயநாதன் ஜெரோம் - 25, மடம் வீதி, யாழ்ப்பாணம்]

யாழ் - மாவிட்டபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். குலன்** (வ. சபாபதிப்பிள்ளை பார்த்தீபன் கோண்டாவில் வடக்கு - யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-7414]

### சிந்தனைக்கு

சந்தேகத்தின் புரையோடிய புண்களை வாதங்களோ, விளக்கங்களோ குணப்படுத்த முடியாது.

—மகாத்மா காந்தி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 14-09-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2028
க. பெ. எண்-05

## பேரினவாதத்தின் எல்லைகள்

கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில, சிங்களப் பத்திரிகைகள் எந்தளவிற்கு பேரினவாதச் சிந்தனையில் ஊறிப் போயுள்ளன என்பதை உலக நாடுகளும், சர்வதேச அமைப்புக்களும் விளங்கிக் கொள்வதற்கு அண்மைக்காலத்தில் அப்பத்திரிகைகள் இவ் அமைப்புக்கள் குறித்தும், நாடுகள் பற்றியும் வெளியிட்ட சில தகவல்கள் சிறந்த உதாரணங்களாகும்

பொதுவாகவே, மனிதநேய ஸ்தாபனங்களும், அரச சார்பற்ற அமைப்புக்களும் தமிழர் பிரதேசத்தில் சேவையாற்றுவதை சிங்களப் பேரினவாதிகள் விரும்புவதில்லை. இதில், சிறிலங்கா பத்திரிகைகளும், அரசாங்கமும் கூட அடங்கும். இவ் அமைப்புக்கள் வடக்கு, கிழக்கில் சேவை ஆற்றுவதன் மூலம், இன்னலுறும் தமிழ் மக்கள் சில அத்தியாவசிய சேவைகளைப் பெற்றுக் கொள்கின்றார்கள் என்பது அவர்களின் கணிப்பீடாகும். அத்தோடு, இப்பகுதிகளில் இடம்பெறும் அரச ஒடுக்குமுறை குறித்த தகவல்கள் வெளிநாடுகளைச் சென்றடைவதற்கு இவ் அமைப்புக்கள் உதவுவதாகவும் அவை கருதுகின்றன.

இந்நிலையில்தான் இவ் அமைப்புக்கள் குறித்து சிங்களப் பேரினவாதிகள் மன அமைதி கொள்வதில்லை. தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்குச் சகுனப் பிழை ஏற்பட்டால் போதும் என்ற நிலையில் தமிழர் விவகாரத்தில் செயற்படும் பேரினவாத அரசு, இவ்விவகாரத்திலும் அவ்வாறே செயற்பட விரும்பினாலும், இதன் மூலம் ஏற்படக்கூடிய நெருக்கடிகளும், நிர்ப்பந்தங்களும் அரசை ஆட்டம்காணச் செய்துவிடும் என்பதை உணர்ந்தே உள்ளது இந்நிலையிலேயே தனது செயற்பாட்டை ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்கின்றது.

இந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் தான், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம், பிரிட்டன் போன்ற நாடுகள் என்பனவற்றிடம் இருந்து பேருதவிகளைப் பெற்றுக் கொள்கின்ற, போதிலும் இவற்றால், தமிழர் தரப்பிற்கு சில உதவிகள் கிடைத்து விடுமோ என்ற ரீதியில், இவ் அமைப்புக்கள் மீதும், நாடுகள் மீதும் சந்தேகப்பார்வை

# தி. மு. கவிற்குள் உட்கட்சி பூசல் உச்சக் கட்டம்; கோஷ்டி மோதல் கொலை வரை சென்றது

## கருணாநிதிக்குகறுப்புச்சால்வை அணிவிப்பு

தி. மு. கவின் உட்கட்சிப் பூசல்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருவதை அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. தி. மு. க தலைவரும், முன்னாள் முதல்வருமான கருணாநிதியின் முன்னிலையிலேயே கோஷ்டிப் பூசல்கள் மோதல்களாக வெடிக்கின்ற நிலையும் ஆபாச வார்த்தைப் பிரயோகங்களால் திட்டித் தீர்த்துக்கொள்ளும் சம்பவங்கள் இடம்பெறுவதும் இப்போது சாதாரணமாகி விட்டிருப்பதாகவே தெரிகிறது

மதுரை சம்பவங்கள் இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. மதுரையில் கலைஞரின் மகன் மு. க. அழகிரி தலைமையிலான கோஷ்டிக்கும், பொன் முத்துராமலிங்கம் தலைமையிலான கோஷ்டிக்கும் இடையிலான உறவுகள் பகைமையாக வளரத் தொடங்கி இருக்கிறது. இதன் நேரடி விளைவுகள் ஜூலை மாத இறுதியில் கலைஞர் மதுரைக்கு வந்தபோது அம்பலமாகியது மதுரை மாநகர தி மு க வரலாற்றிலேயே கருணாநிதியின் வரவேற்புக்கு சுவரொட்டிகள் ஒட்டப்படாமல் இருந்தது இதுவே முதல் தடவை. வாழப்பட்டி மேளம், தாரை, தப்பட்டை என்பன முழங்க மதுரை ரயில்வே ஸ்டேசனில் பாண்டியன் எக்ஸ்பிரஸில் வந்திறங்கிய கருணாநிதியை மு. க அழகிரி, பி. டி. ஆர். பழனி வேல்ராஜன், காவேரி மணியம் போன்றோர் வரவேற்றனர். வழியெங்கும் தனக்கு வைக்கப்பட்டிருந்த கட்-அவுட்டுகள் மற்றும் அலங்கார வளைவுகளைப் பார்த்து ஏக சந்தோஷத்துடன் பாண்டியன் ஹோட்டலுக்குள் நுழைந்த கருணாநிதி திடுக்கிடும் வகையில் சம்பவங்கள் அரங்கேறின ஹோட்டலின் வாசலில் அவரை பொன். முத்துராமலிங்கம் கோஷ்டியினர் வரவேற்றனர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், வை. கோபாலசாமி அணியின் ஆதரவாளருமான செ. ரமச்சந்திரன் அடையாள பூர்வமாக எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கறுப்பு நிறத்திலான சால்வையை அணிவித்தார். கருணாநிதிக்கு இந்தச் சால்வை போர்த்தப் பட்ட போது சுற்றியிருந்தவர்களிடையே லேசான அதிர்ச்சி கலந்த ஆச்சரியம். இதனால் அடுத்து சால்வை போட முனைந்த பொன் முத்துராமலிங்கம் தடுக்கப்பட்டார் திண்டுக்கல் மாவட்டச் செயலாளரும் அழகிரி அணியைச் சேர்ந்தவருமான ஐ. பெரியசாமிக்கும், பொன். முத்துராமலிங்கம் அணியின் பசும்பொன் பாண்டியனுக்கும் இதனை விட்டு வாக்குவாதப்பட இந்த வாக்கு வாதம் முற்றி மோதல் ஆரம்பமானது

பாண்டியன் ஹோட்டலின் லிப்ட்டுக்குள் தஞ்சம் புகுந்தார் பெரியசாமி. லிப்ட் இரண்டாம் மாடிக்கும் மூன்றாம் மாடிக்கும் இடையே நிறுத்தப்பட்டு அதற்குள்ளேயே வைத்து பெரியசாமி நையப்புடைக்கப்பட்டுக் கொண்டிருந்தார். லிப்ட்டுக்காக காத்திருந்த கருணாநிதி மாடிப்படிவழியாகவே ஏறி நடந்து செல்லவேண்டியதாயிற்று. இதன் பின்னர் பொன் முத்துராமலிங்கத்தின் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் கருணாநிதி அறைக்கு வெளியே நிராதரவாய் காத்துக் கிடக்க நேர்ந்தது என் தலைவரைப் பார்த்து விட்டுத்தான் போவேன். நீயார் தடுக்க? என்று இந்த அணியினர் குமுறியது எதுவும் நற்திகளாய் வழிமறித்த அழகிரி அணியினரால் புரிந்து கொள்ளப்படவே இல்லை. மதுரையிலிருந்து கலைஞர் திருநெல்வேலி மாவட்டத்திற்கு புறப்பட்டுச் சென்றார். நெல்லையில் நிகழ்ச்சிகள் என்றால் கலைஞரின் நிழல் போல தொடரும் வை. கோபாலசாமி இம்முறை அந்தப் பக்கம் தலைகாட்டவே இல்லை.

### கொலை வரை சென்றது

தி மு. கவின் இந்த உட்கட்சிப் பூசல்கள் கொலை வரை சென்றுள்ளது என்பதற்கு ஜெயசந்திரன் விவகாரம் ஒரு வகைமாதிரி. கோவில்பட்டி நகரத்தில் கழகப் பணிகளை நிறைவேற்ற நியமிக்கப்பட்ட ஆறுபேரைக் கொண்ட குழுவில் ஜெயச்சந்திரனும் ஒருவர் மாவட்டச் செயலாளரும் அழகிரி அணியைச் சேர்ந்தவருமான பெரியசாமிக்கும், கோவில்பட்டி நகரச் செயலாளரும் வை. கோ. அணியைச் சேர்ந்தவருமான காளியப்பனுக்கும் இடையிலான பூசல்கள் ஜூலை 24-ம் திகதி கருணாநிதி கோவில்பட்டி நகருக்கு வருகை தந்த போது பூதாகரமாகியிருந்தது. கருணாநிதி முன்னிலையிலேயே மேடையிலேயே கூச்சல்கள் குழப்பங்கள் ஏற்படுமளவுக்கு சென்று விட்டதால் கருணாநிதி தனது உரையை சில நிமிடங்களுக்கு மட்டுப்படுத்த வேண்டியதாயிற்று. இதைத் தொடர்ந்து கருணாநிதி சென்னை திரும்பிய பின்னர் தி. மு. க தலைமை நிர்வாகம் அதிரடி நடவடிக்கை எடுத்தது. கோவில்பட்டிநகரக் கழக நிர்வாகிகள் கழகக் கட்டுப்பாடுகளை மீறி நடப்பதால் அந்த அமைப்பை மாற்ற வேண்டும் என்று மாவட்டச் செயலாளர் பெரியசாமி அவித்த பரிந்துரையை ஏற்று நகரக் கழக நிர்வாகிகள் அமைப்பு அறவே கலைக்கப்பட்டதாக பொதுச் செயலாளர் அன்பழகன் அறிவித்தார். அத்துடன் கோவில்பட்டி நகரச் செயலாளர் காளியப்பன் மற்றும் கலைச்செல்வன் ஆகியோர் கழகப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது. ஜெயச்சந்திரன் உட்பட ஆறுபேரைக் கொண்ட புதிய குழு அமைக்கப்பட்டிருப்பதாகவும், கூறப்பட்டது.

தூத்துக்குடி சென்று மாவட்டச் செயலாளர் பெரியசாமியைச் சந்தித்து விட்டு கோவில்பட்டி திரும்பிய ஜெயச்சந்திரனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது கோவில்பட்டி சத்திரம் தெருவிலிருக்கும் ஜெயச்சந்திரனுக்குச் சொந்தமான மியூசிக்கல்ஸ் கடை அடித்து நொருக்கப்பட்டிருந்தது. இதைக் கண்ட ஜெயசந்திரன் தனது ஆதரவாளர்களோடு மார்க்கட் வாசலில் இருக்கும் காளியப்பனின் கடைக்கு வானில் சென்று இறங்கினார். அந்தக் கடையிலிருந்து சுமார் இருபது பேர் கையில் ஆயுதங்களுடன் ஓடிவர வானில் சென்றவர்கள் சிதறி ஓட.... ஜெயச்சந்திரன் கத்திக்குத்துக்கு இலக்கானார். நடுரோட்டில் சரமாரியாக ஆயுதங்களால் தாக்கப்பட்ட ஜெயச்சந்திரன் பதினெட்டு இடங்களில் வெட்டுக் காயங்களுடன் உயிர்இழந்தார்.

ஜெயசந்திரனுக்கு அடுத்த பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த இ. ச. நாராயணன் இதுபற்றிக் கூறுகையில், இந்தக் கொலைக்கு முக்கிய காரணமே குரூப் பொலிடிக்ஸ் தான் என்று அடித்துக் கூறுகிறார்.

### ஆமாம் சாமிகளின் சித்தாந்தம்

தலைவர் நினைத்தால் மூன்றே நாளில் தளபதி ஸ்டாலினைத் தலைவராக்கி விட முடியும் என்று சிதம்பரனார் மாவட்டச் செயலாளர் பெரியசாமி முழக்கமிடுகிறார். இந்தியாவில் தாத்தா. மகன், பேரன் என்று வழிவழியாக வாரிசுகள் வரும்போது ஸ்டாலின் மற்றும் அழகிரியை ஏன் தலைவராக ஆக்கக் கூடாது என்று கலைஞர் முன்னிலையிலேயே கேள்வி எழுப்பி தன் விசுவாசத்தைப் பிரகடனப்படுத்துகிறார், புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் பெரியண்ணன் "வக்கீல் மகன் வக்கீலாகவும், டாக்டரின் மகன் டாக்டராகவும், நடிகர் மகன் நடிகராகவும் வருவது தவறில்லையே அதுபோல் கலைஞரின் மகன்கள் அரசியலுக்கு வருவதில் என்ன தவறு'' என கேட்கிறார் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரகுமான் கான்.

இவை எல்லா வற்றையும் கேட்டுக் கொண்டிருந்த கருணாநிதி தனது உரையின் போது, எனது பிள்ளைகளுக்கு நான் வைத்திருக்கும் பெயர்கள் வீடு. நாடு, உலகம், மொழி என்ற அடிப்படையில் வைக்கப்பட்டவை. அப்போதெல்லாம் எனக்குத் தெரியாது இவர்கள் அரசியலுக்கு வருவார்கள்... என்னோடுசேர்ந்து இப்படிச் சீரழிவார்கள் என்று! தி மு கவின் அடுத்த தலைவர் யார் என்று ஏன் அவசரம்? யாராவது ஜோசியம் பார்த்தீர்களா... கருணாநிதி ஒருமாதம் அல்லது இரண்டு மாதம்தான்வாழ்வான்என்று? அப்படியேகூட நானோ பொதுச் செயலாளரோ இறந்தால் அவரோடு மற்றவர் உடன்கட்டையா ஏறிவிடப் போகிறோம்.'

தி மு. க. கருணாநிதியின் குடும்பச் சொத்தாகிவிட்டது. தன் பிள்ளைகளை வாரிசுகளாக்க எண்ணுகின்றார் என்று எழுதுகின்ற பத்திரிகைகளின் ஆசிரியர்கள் கூட வாரிசுகள் வழி வந்தவர்கள்தானே. அரசியலிலும் எத்தனைபோ பேருடைய வாரிசுகள் இருக்கிறார்களே? என்ன செய்வது? நானும் மலடாக இல்லை. என்னுடைய மனைவிமார்களும் மலடிகளாக இல்லை. நான் பெற்ற குழந்தைகள் என்பதற்காக அவர்களை எல்லாம் அமைச்சரவையில் அடுக்கி உட்கார வைத்து விட்டேனா என்று உணர்ச்சிவசப்பட்டு முழங்கினார்.

ஆனால், பழநி நாடாளுமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தல் வேலைகளை கவனிப்பதில் புறநகர் மாவட்டச் செயலாளரான பொன். முத்துராமலிங்கமும் ஓரங்கட்டப்பட்டுள்ளார். தேர்தல் அறிவிக்கப்பட்டபோது அமைக்கப்பட்ட தேர்தல் பணிக்குழுவில் இடம்பெற்றிருந்த பொன். முத்துராமலிங்கம் இப்போதுமேலிடத்தால் ஓரங்கட்டப்பட்டிருந்தாலும் அமைதியோடு பொறுத்திருந்து பார்ப்போம் என்பதுவே வை. கோ. வின் அறிவுரையாகவுள்ளதாம்.

**இளையவன்**

# தமிழகத்தில் அதிகரித்துவரும்

## பாலத்தீன சபைக்கான தேர்தல் 10 மாதங்களில் நடைபெறும்

புக்கள் மீதும், நாடுகள் மீதும் சந்தேகப்பார்வையைக் கொண்டுள்ளன. இதனால், அவற்றின் நடவடிக்கை குறித்து அடிக்கடி கேள்வியும் எழுப்பி வருகின்றன.

அண்மையில், விடுதலைப்புலிகளின் காவலில் இருக்கும் கைதிகள் விவகாரத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மனிதநேய அடிப்படையில் செயற்பட்டபோது சிங்களப் பத்திரிகைகளும், அரசியல்வாதிகளும், புலிகளின் ஆதரவாக அவ் அமைப்பு செயற்படுவதாகக் குற்றம்சாட்டின. கைதிகளின் உறவினர்களை விடுதலைப்புலிகள் பணயக் கைதிகளாகப் பிடிப்பதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உதவியதாக எதுவித ஆதாரமும் இன்றி எழுதின.

இதேபோன்றே, பூநகரிப்பாதை விவகாரத்திலும் அரசிற்கும் - புலிகளுக்கும் இடையில் இரகசிய உடன்பாடு ஒன்று ஏற்பட்டுள்ளதாகவும் அதற்கு அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயம் உதவி வழங்கியுள்ளதாகவும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டன. அதாவது சில மாதங்களுக்கு முன் கைவிடப்பட்ட ஒரு திட்டத்தை எந்தவித ஆதாரமுமின்றி வெளியிட்டு அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயம் மீது குற்றம் சுமத்த முற்பட்டன.

இதை ஒத்ததாகவே பிரிட்டன் அரசு விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றதென்ற 'ஐலண்ட்'டின் குற்றச் சாட்டுமாகும். பிரிட்டன் நீண்ட நாட்களாகவே சிறிலங்காவின் நட்பு நாடு. தமிழருக்கு பல தார்மீக கடமைகளை பிரிட்டன் ஆற்ற வேண்டி இருந்தும் சிறிலங்காவின் நட்பிற்காக அதைப்பற்றி அக்கறை காட்டாதநாடு. அதேவேளை சிறிலங்காவிற்கு நிதி உதவியும், ஆயுத உதவியும் செய்யும் நாடுகளிலும் ஒன்று இந்நிலையிலும் யாழ் போதனா வைத்தியசாலைக்கு பிரிட்டன அரசு வழங்கியுள்ள சிறு உதவியைக் கொண்டே -அவையும் இன்னும் வந்து சேரவில்லை.- பிரிட்டிஷ் அரசு புலிகளின ஆதரவாகச் செயற்படுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறாக சிங்களப் பேரினவாதம் கொண்டுள்ள நிலைப்பாட்டினை உலகம் புரிந்து கொள்ள வேண்டும். தமிழர்களின் உரிமைகள் மட்டுமலல, தமிழர்களின் அத்தியாவசிய தேவைகள் கூட நிறைவு செய்யப்படுவதை சிங்களப் பேரினவாதம் விரும்பவில்லை. இவற்றைப் பெற்றுக்கொள்ள தமிழருக்கு உதவும் அமைப்புக்களையும் அவை அனுமதிக்கத் தயாராக இல்லை. ஆனால் அவர்களின் தேவையும் சில நிர்ப்பந்தங்களுமே இவ் அமைப்புக்களை அரசு வடக்கு கிழக்கில அனுமதிக்கக் காரணமே ஒழிய, மனித நேயமோ அன்றி மனித உரிமை மீது கொண்டுள்ள காதலோ காரணமல்ல.

## பெண் சிசுக் கொலை

### தடுக்க நடவடிக்கை

தமிழ் நாட்டில் கடந்த சில வருடங்களாக அதிகரித்து வரும் பெண் சிசுக்கொலையை ஒழிப்பதற்கு தமிழ் நாடு அரசு சில திட்டங்களை அறிவித்துள்ளது. பெண் குழந்தைகள் பிறந்ததும் கிராம வாசிகளால் அவை உடன் கொல்லப்படுவது அதிகரித்திருப்பதை அடுத்து அதனைத் தடுப்பதற்கான பிரசார நடவடிக்கையை தமிழ்நாடு அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் தமக்கு வேண்டாத பெண் குழந்தைகளை ஒப்படைப்பதற்கு தமிழ்நாடு அரசாங்கம் கிராமப்புறப்பகுதிகளில் நிலையங்களைத்திறந்துள்ளது. இவ்வாறு சிசுக்களைக் கொல்லாதிருப்பதற்கு பணம் வழங்கவும் முன் வந்துள்ளது. மேலும் பெண் சிசுக் கொலைகள் அதிகம் இடம்பெறும் சேலம், மதுரை மாவட்டங்களில் அதனைத் தடுக்க விழிப்புக்குழுக்களும் அமைக்கப்பட்டுவருகிறது.

பெண் குழந்தை பிறந்ததும் அப்பிள்ளையை வளர்ப்பதற்குப் பெரும்தொகைப் பணத்தைச் செலவிட வேண்டியிருப்பதாகவும் அப்பிள்ளையைத் திருமணம் செய்து கொடுப்பதிலும் அதற்குப் பின்னரும் பிரச்சினைகள் ஏற்படுகிறது எனவும் கிராமவாசிகள் தெரிவிப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

அதற்காகவே பெண் குழந்தைகள் பிறந்ததும் 24 மணி நேரத்திற்குள்ளேயே வெற்றேரின் உதவியுடன் அக்குழந்தை கொல்லப்படுகிறது என அவ் அதிகாரி கூறுகிறார்.

சிசுக் கொலைகளை பார்த்துக்கொண்டிருக்க வேண்டாம் என பொலிசாருக்கு அறிவுறுத்தல் விடப்பட்டுள்ளது. மதுரை, சேலம் ஆகிய மாவட்டங்களில் வீடுவீடாகச் சென்று சிசுக் கொலைகள் நிறுத்த பிரசாரம் செய்யப்படுகிறது. மேலும் தமிழ்நாடு பஸ்களில் பெண் குழந்தைகளைக் கொல்லாதீர் என்ற சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன.

## தனக்குத்தானே தமிழக அரசு குழி பறிக்கின்றது

### -ரங்கராஜன் குமாரமங்கலம்

தமிழ் நாடு அரசை மத்திய அரசு கலைக்க வேண்டியதில்லை. மாநில அரசு தனக்குத் தானே குழி பறித்துக் கொண்டிருக்கும் போது மத்திய அரசு ஏன் அதனைக் கலைக்க வேண்டும் என்று மத்திய இணை அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் கேள்வி எழுப்பினார்.

அண்மையில் சென்னையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், மாநில அரசு ஊழலுக்கு தாராள அனுமதி வழங்கியுள்ளது. மாநில அரசே அதன் நடவடிக்கைகளுக்கு பொறுப்பேற்றாக வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## பூந்தமல்லி சிறைமீதும் புலிகள் தாக்கலாமாம்

[சென்னை]

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் நபர்களை காவலில் வைத்திருக்கும் பூந்தமல்லி சிறைமீது தற்கொலைப் படைத்தாக்குதல் மேற்கொள்ள விடுதலைப் புலிகள் முயற்சி மேற்கொள்ளக் கூடும் என்று தமிழக அரசு வழக்கறிஞர், வழக்கு விசாரணையின் போது நீதி மன்றத்தில் கூறியிருப்பதாக தமிழ் நாடு சட்டப் பேரவை இந்திரா காங்கிரஸ் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று சென்னையில்செய்தியாளரிடம் பேசியஅவர், தமிழ் நாட்டில் புலிகள் ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் குவிக்க முயற்சிகள் மேற்கொண்டிருப்பதாகக் கிடைக்கும் தகவல்களைத் தமிழக அரசு அலட்சியப் படுத்தி விடக் கூடாது என்றார். சமீப காலமாகத் தமிழ் நாட்டில் புலிகளின் நடவடிக்கைகள் உத்வேகம் பெற்றிருப்பதாகவும் கூறினார்.

## 10 மாதங்களில் நடைபெறும்

[வாஷிங்டன்]

பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையே கையெழுத்தாகும் உடன்படிக்கையின்படி காஸாப் பகுதியிலும், ஜோர்தான் மேற்குக் கரையிலும் பாலஸ்தீனிய சுயாட்சிப் பகுதிக்கான பாலஸ்தீன சபையை தெரிவு செய்வதற்கான தேர்தல் பத்து மாத காலத்தில் நடைபெறும் என்றும், இச்சபை ஐந்து ஆண்டு காலம் பதவிவகிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இடைக்காலப் பகுதிக்குள் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கான பேச்சுவார்த்தைகளை இஸ்ரேலிய பாலஸ்தீனியப் பிரதிநிதிகள் மேற்கொள்வார்கள். கோட்பாடுகள் அடங்கிய பிரகடனம் கையெழுத்தாகியதும், இப்பகுதியிலிருந்து இஸ்ரேலியத் துருப்புக்களை மீளப் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும்.

## ஜெருசலேமே இஸ்ரேலின் தலைநகராக இருக்கும்

### யிட்சாக் ரபீன்

(டிலவி)

சமாதான உடன்படிக்கை என்றால் ஜெருசலேமில் பாலஸ்தீனியர் கொடி பறக்கும் என்று பாலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாசீர் அரபாத் கூறியதாக வெளிவந்துள்ள செய்திளை இஸ்ரேலியப் பிரதமர் யிட்சாக்ரபீன் நிராகரித்துள்ளார்.

இஸ்ரேலிய பாலஸ்தீனிய உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா புறப்பட்டார். டெல் அவிவ் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், ஜெருசலேமே தமது இஸ்ரேலின் தலைநகராக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை அமெரிக்காவுக்கு சென்றுள்ள பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் தான் சமாதானத்தை நாடியே வாசிங்டன் வந்திருப்பதாகத் தெரிவித்தார்.

## ரஷ்ய அமைச்சரும் வாசிங்டன் சென்றார்

(வாசிங்டன்)

இஸ்ரேலிய பாலஸ்தீனிய உடன்பாடு கையெழுத்தாகும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக ரஷ்ய வெளிநாட்டு அமைச்சர் அந்திரே கொசிக்கோவ் வாசிங்டனுக்குப் புறப்பட்டுள்ளார் இந்த வைபவத்திற்கான ஏற்பாடுகள் பிரம்மாண்டமான வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன மூவாயிரத்துக்கும் அதிகமான பார்வையாளர்கள் கலந்து கொள்ளவும் ஏற்பாடாகியுள்ள இவ் வைபவத்திற்கான பாதுகாப்பு ஒழுங்குகளும் பலப்படுத்தப்பட்டு. வெள்ளை மாளிகையை சுற்றியுள்ள பாதைகள் போக்குவரத்திற்கு மூடப்பட்டுள்ளன.

**உழவும், தொழிலும் இன்றேல்-நாட்டில் உயிரும் உடலும் ஏது.**

# இஸ்ரேல் - பி. எல். ஓ. ஒப்பந்தம் கைச்சாத்து

(வாஷிங்டன்)

இஸ்ரேலும் பாலஸ்தீன விடுதலை இயக்கமும் சமாதான உடன்படிக்கையில் நேற்று கைச்சாத்திட்டன.

வாஷிங்டன் நகரில் உள்ள வெள்ளை மாளிகையில் வைத்து நேற்று இரவு 9 10 மணியளவில் கைச்சாத்திடப்பட்டது. இவ்வைபவத்தில் உலகத்தலைவர்கள் பலரும் சர்வதேச செய்தியாளர்கள் பலரும் கலந்துகொண்டனர். அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகும் வைபவத்தில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் ஆரம்ப உரை நிகழ்த்தினார்.

அமெரிக்க ஜனாதிபதியைத் தொடர்ந்து இஸ்ரேல் வெளியுறவுத் துறை அமைச்சர் பீரசும், பி. எல். ஓ. சர்வதேச விவகாரத் தலைவர் மொஹமட் அப்பாசும் உரை நிகழ்த்தினர். இதன் பின்னர் இவர்கள் இருவரும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இதன் பின்னர் மத்திய கிழக்கு அமைதிப் பேச்சு வார்த்தையை முன்னின்று நடத்தும் அமெரிக்கா மற்றும் ரஷ்யத் தரப்பில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் வோரிஸ் கிறிஸ்தோப்பரும், ரஷ்ய வெளியுறவு அமைச்சர் அந்திரோகொஷ்ரேவும் ஒப்பந்தத்தில் சாட்சிகளாக கையெழுத்திட்டனர்.

அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகியதும் போரிஸ்கிறிஸ்தோப்பர், கொஷ்ரே இஸ்ரேல் பிரதமர் இற்சாக்ரபின் மற்றும் பி. எல். ஓ தலைவர் யாசீர் அரபாத் ஆகியோரும் உரையாற்றினர். இறுதியாக அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் இந்நிகழ்ச்சியை நிறைவு செய்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில உரையாற்றிய ஒவ்வொருவரும் மூன்று நிமிடங்கள் மட்டுமே உரையாற்றினர்.

அமெரிக்காவின் முன்னாள் அதிபர்களான ஜோர்ச் புஷ் ஜிம்மி காட்டர், காங்கிரஸ் உறுப்பினர்கள், அமெரிக்காவில் உள்ள வெளிநாட்டுத் தூதர்கள், அதிகாரிகள், இஸ்ரேல் பிரதிநிதிகள், பாலஸ்தீனப் பிரதிநிதிகள், மற்றும் வெளிநாடுகளின் பிரதிநிதிகள் என சுமார் 3000 பேர் அமைதி ஒப்பந்தம் கைச்சாத்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

300புகைப்படப்பிடிப்பாளர் உட்பட சுமார் 3000 பத்திரிகையாளர்கள் இந்த வைபவத்தில் செய்தி சேகரித்தனர்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியபின் இஸ்ரேல் பிரதமர் ரபின் பி. எல். ஓ தலைவர் யாஸீர் அரபாத்தைச் சந்தித்துப் பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் சந்திப்பு முதன் முதலாக நடைபெறுகிறது.

இந்திய - இலங்கை நேரப்படி பி.ப. 7.30மணிக்கு இஸ்ரேல் மற்றும் பி.எல்.ஓ தலைவர்கள் வெள்ளை மாளிகைக்கு வருகை தந்தனர்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**13-09-93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 10906

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-9938, 28-5294, 42-3339, 27-7627, 43-4045
26-3893, 26 8138, 41-1996, 24-6475, 41-6784
41-9696, 41-9355, 24-6646.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்!

40-1688, 28-3528, 24-3063, 41-9211, 42-3368
24-9337, 28 6623, 42-1178, 26-6461, 28-2156
26-9992, 42-2317, 40-9188.


## யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு

464, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(Commercial Bank அருகில்)

முழுநேர வகுப்புக்கள் சிறந்த நூலக வசதியுடன் ஆரம்பமாக இருக்கின்றன. பின்வரும் வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. B. A. Part - I — யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
2. B. A. Part - II — ,, ,,
3. G. A. Q. — ,, ,,
4. G. S. Q. — பேராதனைப் பல்கலைக்கழகம்


## மீனவர் மீது

வள்ளத்தில் சென்ற கடற்றொழிலாளர்கள் சமயோசிதமாக வள்ளத்திற்கு மறைவில் கடலில் குதித்து உயிர் பிழைத்துக் கரை வந்து சேர்ந்தனர்.

## யுத்தமுனைக்குச்

சாரிகளுக்கு பதவி உயர்வு கிடைப்பதில்லை. இதனை மாற்றிஅமைத்து எதிர்காலத்தில் யுத்தமுனையில் அதிகாரிகள் செயற்படும் திறமையை அடிப்படையாக வைத்தே பதவி உயர்வு வழங்கப்படும் என மேலும் அவர் தெரிவித்தார்.

மேலும் யுத்த களத்தில் நிற்கும் படையினருக்கு தேவையான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## இந்திய

இந்தியப் படகுகளும், கப்பல்களும் அப் பகுதியில் செல்வதற்கான உரிமையை இது மறுப்பதாகும் என்றும் கடல் போக்குவரத்துச் சர்வதேசச் சட்டத்தை இது மீறுவதா

# கல்வி வளர்ச்சிக் கழக ஓராண்டு நிறைவு விழா

கோக்குவில் நாமகள் கல்வி வளர்ச்சிக் கழக ஓராண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் இன்று மாலை 4.00 மணிக்கு கொக்குவிலில் நடைபெறவுள்ளது. இவ் விழா மாணவர் அமைப்பின் யாழ். கோட்ட பொறுப்பாளர் செல்வி பூம்பொழில் தலைமையில் நடைபெறவுள்ளது. மேற்படி நிகழ்வுகளில் கொக்குவில் கொத்தணி அதிபர் திரு. இ மகேந்திரராசா சிறப்பு விருந்தினராகவும், பிரதம விருந்தினராக வவிகாம அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு திருக்குமரன், மாணவர் அமைப்பு பொறுப்பாளர் யாழ் மாவட்டம் செல்வி ம. வாசுகி ஆகியோர் கலந்து கொள்கின்றனர். இந்நிகழ்வின் இறுதியில் 7.00 மணியளவில் விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் கலை நிகழ்வும் இடம்பெறும்.

## கருத்தரங்கு பிற்போடப்பட்டது

யா/ அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நாளை நடைபெறவிருந்த ஆரம்பக் கல்வி சம்பந்தமான அதிபர்களுக்கும், பகுதித்தலைவர்களுக்குமான சேவைக்காலப் பயிற்சிக் கருத்தரங்கு 16ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் என வடமராட்சிக் கோட்டக் கல்வி அதிகாரி அறிவிக்கிறார்.

## கலந்துரையாடல்

ப. நோ. கூ. சங்கங்களுடனான மாதாந்த கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பி. ப. 2. 00 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இதற்கு பிரதேச செயலர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், ப. நோ. கூ. சங்கத் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளும் படி திட்டப்பணிப்பாளர் செ. பதிமநாதன் அறிவித்துள்ளார்.

## ஐ.நா.

அறிந்து கொள்வார் எனவும், தெரிவிக்கப்பட்டுள்ளதோடு,

இவ் ஐ. நா. பிரதிநிதி தலைவர், வே. பிரபாகரனை சந்திக்க யாழ்ப்பாணம் செல்லலாம் என்றும், சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படுவதாகவும், ஐ. நா. உயர் வட்டாரங்களில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவிப்பதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## தியாகி

வீதியில் நல்லூர் வட்டமக்கள். கரவெட்டி வட்டத்தில் நெல்லியடி கிழக்கு சாமியன் அரசடியில் மத்தொனி கரவெட்டி வடக்கு பொதுமக்கள், உடுப்பிட்டி வட்டத்தில் உடுப்பிட்டி மத்தி வைரவர் கோவிலடியில் சரணவாய் தெற்கு/ மேற்கு மக்கள், பருத்தித்துறை வட்டத்தில் அல்வாய் முத்துமாரியம்மன் கோவிலடியில் வட/ கிழக்கு, வட/மத்தி மக்கள், பனைவட்டத்தில் பளை பிரதேச சபை முன்னால், இத்தாவில் சிற்றூர் மக்கள் மாசார் அ. த. க. பாடசாலை, கொடிகாமம் வட்டத்தில் புகையிரத நிலைய அருகாமையில் திலீபன் நகர், வேளாப்பள்ளம், பாரதி சனசமூக நிலையம், கொடிகாமம் திருநா. வித். எழுதுமட்டுவாள் அ. த. க. பாடசாலை வடக்கு மிருசுவில் ச. ச.நிலையம், சாவகச்சேரி வட்டத்தில் மணம்குணாய் பிள்ளையார் கோவில் முன்பாக கோயிற்குடியிருப்பு, மட்டுவில் கிழக்கு, தெற்கு, நுணாவில், மீசாலை மேற்கு, திவ்வியஜீவன சங்கம். மட்டுவில்நரசபை, கமலாசனி வித்தியாசாலை, சணேசா வித்தியாசாலை,

## தியாகி திலீபன்

இவற்றைவிட குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள பொது இடங்கள், சனசமூக நிலையங்கள் மாதர் மன்றங்கள் மற்றும் மக்கள்கூடும் பகுதிகளில் எல்லாம் இவ்வாறு பதாகைகளும், வர்ணத்தோரணங்களும் கட்டப்பட்டுள்ளன.


மேலும் தியாகி திலீபனை நினைவுகூரும் முகமாக குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வட்டப்பிரிவு ரீதியாக சிரமதானநிகழ்ச்சிகளும் அடையாள உண்ணா விரதங்களும் நடைபெற உள்ளன. நாளை முதல் இவ்வாறான நினைவு கூரும் நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

குடாநாட்டில் மட்டுமல்லாது கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா போன்ற பகுதிகளிலும் தியாகி திலீபனின் நினைவு நாட்களை நினைவு கூருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## யுத்தத்தில்

முறை காரணமாக கிழக்கு மாகாணத்தில் படையினர்

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## லெப். கேணல் ராஜன்

[சோமசுந்தரம் சற்குணம் - மாதகல்]

மலர்வு 14 02. 1966 — வீரச்சாவு 27. 08. 1992

திதி:- 14 09- 1993

"எதிரிப்படையின் ஆணிவேரை அறிந்தவன்
ஒரு போதும் போரைக் கண்டு அஞ்சான்"

— தளபதி ராஜன்

தாயின் மடியில் பிறந்த சற்குணம் நீர்!
தலைவன் அணியில் வீரவேங்கை ராஜன் ஆனாய்!
குடும்பமதில் பாசமிகு தம்பி நீர்!
பாசறையில் உறுதிமிகுந்த தளபதி ஆனாய்!
தரணியதில் நீர் பிறந்த போது தாய் மகிழ்ந்தாள்!
தாய் மண்ணில் வீரசுவர்க்கம் ஆனவுடன்
தமிழீழமெங்கும் அதிர்ந்ததுவே!
போர் முழக்கம் தொடர்கிறதே! உங்கள் இலட்சிய
வேட்கை நிறைவேறும் நாளும் நெருங்குகிறதே!

இன்று கல்வியங்காட்டிலுள்ள எமது இல்லத்தில் ஆண்டுத்திதி கிரியைகள் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், சகபோராளிகளையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

விளையாட்டு அரங்க வீதி,
கல்வியங்காடு.

— குடும்பத்தினர்.

[6013]

பாடங்கள்: G. A. Q. B. A. வகுப்புகள்
தமிழ், கிறிஸ்தவம், இந்துநாகரிகம், அரசியல் விஞ்ஞானம், ஆங்கிலஇலக்கியம், மெய்யியல்.

G. S. Q. பாடங்கள்: கணிதம், புள்ளிவிவரவியல்

விண்ணப்பப் படிவங்களை மேற்படி விலாசத்திற்கு 15. 09. 1993 தொடக்கம் கிழமை நாட்களில் காலை 9. 00 மணி முதல் மாலை 4. 00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 25 09 93**

(இ-7411) பதிவாளர்

---

# COMPUTER கல்வி

**Diploma in Computer Programming**

**BASIC Language**

**4 MONTHS**

திங்கள், புதன் வகுப்புகள்

**ஆரம்பம்: 15-09-1993**

10.30 மணி

C. I. M. A., I. A. B. Lotus 1–2–3

SHORT–HAND &TYPING

நடைபெறுகின்றன,

Lectures by: S. P. SIVAPATHASUNDARAM
M. I. D. P. M. (Lond )

Fees: மாதம் ரூ. 400/- மட்டுமே

மேலும் விபரங்களுக்கு:

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

(Pioneers in Computer Education)

16, 3rd Cross Street, Jaffna.

(சி-7417)

---

...கும் என்றும் சுட்டிக்காட்டி இது பற்றி இந்திய அரசு சிறிலங்கா அரசிடம் ஆட்சேபம் தெரிவித்திருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

...கட்டு

இன. நாங்கள் கைகளை உயர்த்தியவாறு மீனவர்கள் என்று அலறியபோதிலும் கடற்படையினரின் தாக்குதல் ஓயவில்லை.

எம்மைச் சுற்றிவளைத்த கடற்படையினர் இரணைத் தாக்குதலை எங்கள் மீது வெகு வெகுவாக தாக்கிக் கொண்டிருந்தனர். அப்போது என் அருகில் நின்ற தேவதிரவியம் கடலில் விழுந்தார். என் தலையிலும் சன்னங்கள் பட்டதில் நானும் கடலில் குதித்துக் கொண்டேன். பின்னர் ஒருவாறு கரையை வந்து சேர்ந்தேன். அப்போது கடலில் ஏற்பட்ட பதற்றத்தினால் கடலில் விழுந்தவரை என்னால் தேடவோ மீட்கவோ முடியவில்லை என்றார். (யோ)

வைத்தியசாலை கணேசா வித்தியாசாலை, கைதடி வட்டத்தில் கைதடிச்சந்திக்கு அருகாமையில் கைதடி சிற்றூர், முத்துக்குமாரசாமி ம. வித்தியாலயம், திவகக் கோட்டத்தினர் நல்லூர் கோவில் முன்றலில் திவக பநோ கூ.ச., புங்குடுதீவு மகாவித்தியாலயம் புனகபிரத குடியிருப்பு மக்கள் சிரமதானங்கள் பின்வரும் இடங்களில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. சண்டிலிப்பாய் வட்டத்தில் பிரான்பற்று/முல்லையடியில் நாவலர் ச. ச. நிலையத்தினரால் வீதி துப்பரவாக்கம், கரவெட்டி வட்டத்தில் சவுந்தில் ச.ச நி., சித்தாமணி ச. ச. நி. உறுப்பினர் பொது மக்களால் அம்பன் மருத்துவமனை துப்புரவாக்கம், உடுப்பிட்டி வட்டத்தில் அச்சுவேலி பாடசாலை முன் மாவீரர் பட சுற்றாடல் துப்புரவு செய்தல், பருத்தித்துறை வட்டத்தில் அன்னை ச. ச. நிலைய உறுப்பினர், பொது மக்களால் மந்திகை ஆதார வைத்தியசாலை துப்புரவாக்கம்.

முறை காரணமாக கிழக்கு மாகாணத்தில் படையினர் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்களை எந்தவொரு தாக்குதலையும் முறியடிக்கும் வகையில் படையினர் தயார்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்கவும், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்தினவும் கடந்த வாரம் கிழக்கிற்கு சென்று நிலைமைகளை பார்வையிட்டுள்ளனர்.

அண்மைய இராணுவ அமைப்பு மாற்றத்தையடுத்து முப்படையினருக்கும் புதிய உத்வேகத்தை ஏற்படுத்தி விடுதலைப் புலிகளுக்கு எதிரான முழு அளவிலான யுத்தத்தில் ஈடுபடுவதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என படைவட்டாரங்களில் பேசப்பட்டு வருகிறது.

---

# பூப்புனித நந்நீராட்டு அழைப்பிதழ்



அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் ஆவணி 30ஆம் திகதி (15 09 93, புதன்கிழமை காலை 9மணி முதல்10 மணிவரை வரும்மகர நட்சத்திரமும் சிங்கலக்கினமும்கூடியசுபவேளையில்

எமது சிரேஷ்ட புத்திரி

திருநிறை செல்வி **பவானி** அவர்களுக்கு

எமது இல்லத்தில் பூப்புனிதநந்நீராட்டு செய்ய பெரியோர் நிச்சயித்திருப்பதால்அத்தருணம்உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து செல்வியை வாழ்த்தியேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பில்லை)



தங்கள் நல்வரவை நாடும்

**வ. கோபாலபிள்ளை தம்பதிகள்**

அறத்திச் சந்தி,
புலோப்பளை, பளை.

விலாசினி கபே,
கண்டி வீதி,
பளை.

(6007)

---

கல்வியங்காடு. [6013]

---

# மரண அறிவித்தல்கள்

## பாக்கியம் கனகரத்தினம்

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பாக்கியம் கனகரத்தினம் 09-09-93 இல் கொழும்பில் காலமாகிவிட்டார். இவர் வவுனியா, சு. க. கனகரத்தினம் [சந்தையா அன் சன் உரிமையாளர்] அவர்களின் அன்பு மனைவியும், கனகேந்திரம்பிள்ளை (நீர்ப்பாசன இலாகா), சுறிஸ்கந்தராசா (பொறியியலாளர் கனடா), காலஞ்சென்ற சிவராசா, நித்தியானந்தன், சிவானந்தன் [லண்டன்], பவானந்தன், பவானி [லண்டன்], தயானந்தன் (ஜேர்மனி], வசந்தினி [லண்டன்], மங்களேஸ்வரி [கனடா] ஆகியோரின் அருமைத் தாயாரும், சிவகௌரி, தவமணி (டாக்டர் கனடா], நிர்மலாதேவி, சந்திராதேவி, செல்வராசா [லண்டன்], பெற்றா [ஜெர்மனி], ரவிச்சந்திரன் [லண்டன்] ஆகியோரின் அருமை மாமியாரும், தர்சினி, சுதாகரன், ஜெயப்பிரதாபன், கிருசாந்தினி, பஞ்சோ, அகிலா, நிரஞ்சன், சோபனா, பகீரதன், அருள்ராஜ், சிந்துஜா, டெனிஸ், டானியல், றயூரன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், ஆறுமுகம், செல்லம்மாவின் அருமைச் சகோதரியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் ஞாயிறு [12-9-93] அன்று பிற்பகல் 2 மணியளவில் கொழும்பில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

155/6, காலிவீதி,
பம்பலப்பிட்டி.

கனகேந்திரம்பிள்ளை,

(6016)

---

திருமதி

## சின்னத்தம்பி தையல்அம்மை

(வேலணைத் துறையூர்)

திருமதி சின்னத்தம்பி தையல் அம்மை 13. 9. 93 காலை காலமானார். இவர் சண்முகம், கார்த்திகேசு, திருமதி பொன்னம்மா, திருமதி பாக்கியம் ஆகியோரின் அன்புத் தாயாரும், மனோன்மணி, கனகம்மா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பி. ப. 2 மணியளவில் திருமதி புனிதம் அருளானந்தம், 46, ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளிற்காக சோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

-தகவல்-

[6014] சி. கார்த்திகேசு (மகன்)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது